பக்கங்கள் 15+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 05 வியாழக்கிழமை 18.04.2024 அதிர்வு 262

## 2 பெண்களின் சடலங்கள் மீட்பு!

### களுத்துறையில் பரபரப்பு

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசுரு உயன பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் இரண்டு பெண்களின் 04

## உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழா நாளை ஆரம்பம்

### இந்திய நாடாளுமன்றத் தேர்தல் பற்றி மனோ கருத்து



உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவின் முதலாம் கட்டம் நாளை ஆரம்பமாகின்றது. தனது பல கட்சி அரசியல் ஜனநாயகம் காரணமாக, இந்தியா, உலக பரப்பில் மிக உயரத்தில் வைத்து மதிக்கப்படுகின்றது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார். 04





# மைத்திரிக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு!



### நடுவீதியில் அந்தரிக்கும் சு.க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. 04

## நெடுங்கேணியில் மாரடைப்பால் கணவர் மரணம்! இறப்பைத் தாங்க முடியாது மனைவி உயிர்மாய்ப்பு!!

(கே.வசந்தன்)

நெடுங்கேணியில் மாரடைப்பு நோய் காரணமாக கணவன் இறந்ததும், கணவனின் இறப்பை தாங்க முடியாத மனைவி தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இன்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, 04







# “பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்!”

## கண்டுமணி மகா வித்தியாலயத்துக்கு முன்னால் போராட்டம்

**(வவுணதீவு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தின் முன்னால், பழுகாமத்திலுள்ள மூன்று பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறுகிய காலத்தில் வலயத்தை முன்னேற்றிய கல்விப் பணிப்பாளர் எமக்கு வேண்டும், அரச அதிகாரிகள் மீதான அரசியல் பழிவாங்கலை உடன் நிறுத்து, பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் முறைகேடான இடமாற்றத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் போன்ற பல வாசகங்கள் எழுதிய பாதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த சிவினந்தம் சிறிதரனை இடமாற்றம் செய்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மீண்டும் சி.சிறிதரனைப் பட்டிருப்பு வலயத்துக்கு கல்விப் பணிப்பாளராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்து, கிழக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

















# புணானை பல்கலையில் களைகட்டிய புத்தாண்டு!

**(அஸ்ஹர்இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, புணானை தொழில் நுட்பப் பல்கலைக்கழக பூங்காவில் மூவினத்தவரும் ஒன்றிணைந்த புது வருட நிகழ்வுகளை நடத்தியுள்ளனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டு மற்றும் புனித நோன்பு பெருநாள் விடுமுறைக்குப் பின்னர் புதிய கல்வி ஆண்டை ஆரம்பித்து வைத்ததனர். விரிவுரையாளர்கள், உத்தியோஸ்தர்கள், ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகள் மீண்டும் இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத் தலைவர், துணைவேந்தர், உதவி துணை வேந்தர், பதிவாளர் என அனைவரும் பங்கேற்றனர்.

புதுப்பிக்கப்பட்ட ஆற்றல் மற்றும் உற்சாகத்துடன், கற்றல் மற்றும் வளர்ச்சியின் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதில் அனைவரும் மகிழ்வுற்றனர்.





# இராணுவத் தளபதி கௌரவிப்பு!





**(எம். எப். நவாஸ்)**

24 ஆவது இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நெபுல சந்திர ஸ்ரீ ஓய்வு பெற்று செல்லவதை முன்னிட்டு, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தால் அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

ஊடகவியலாளர்களின் சினேகபூர்வ கடந்த கால நடவடிக்கையை முன்னிட்டு அவருக்கு போரத்தின் தவிசாளர் எம் ஏ. பவூர்த்தீன் தலைமையில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் போரத்தின் தலைவர் எஸ் எம். ஹனீபா உப தலைவர், செயலாளர், பொருளாளர் என பல ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# யாழில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மின் இணைப்பு இல்லாமல் மக்கள் அவதி

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், பலாலி வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் 45 வீடுகளில் மின்சார இணைப்பு இல்லாமல் மக்கள் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,



பலாலி வடக்கில் மீள்குடியேறி ஒரு வருடமாகியும் 45 வீடுகளுக்கான மின் இணைப்புக்கள் இதுவரை காலமும் வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர் என்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சுகிர்தனால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது, யாழ். மாவட்டத்தில் புதிய மின் அலகுகளை இணைப்பதற்கென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சால் 11 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நிதி போதாமையால் புதிய இணைப்புகளை மேற்கொள்ளத் தாமதப்படுத்தப்படுவதாக இலங்கை மின்சார சபையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு மீள்குடியேறிய மக்களுக்கான மின் இணைப்பை வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

# கடலில் குழந்தை பிரசவித்த நயினாதீவு பெண்

யாழ்ப்பாணம், நயினாதீவை சேர்ந்த பெண்ணொருவர் கடலில் குழந்தை பிரசவித்துள்ளார்.

நயினாதீவைச் சேர்ந்த பெண்ணுக்கு நேற்று திடீரென பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து அவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றுமாறு வைத்தியர் பரிந்துரைத்தார். அதையடுத்து மேற்படி பெண்ணை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு, அம்புலன்ஸ் படகு தற்போது சேவையில் ஈடுபடாததால், பொதுமக்கள் போக்குவரத்து படகில் அவரை ஏற்றி குறிகாட்டுவான் நோக்கி அழைத்து வந்தனர்.

அந்நிலையில், கடலில் படகு பயணித்துக்கொண்டிருந்தவேளை, பிரசவ வலி பெண்ணுக்கு அதிகரித்ததையடுத்து படகின் கீழ் தளத்தில் இருந்த ஆண்களை மேல் தளத்துக்கு அனுப்பி வைத்த பின்னர், படகில் பயணித்த பெண்களே பிரசவம் பார்த்தனர்.

படகு குறிகட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்ததும், அங்கு தயார் நிலையில் நின்ற புங்குடுதீவு வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனத்தில் தாயையும் சேயையும், யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

தற்போது தாயும் சேயும் நலமாக உள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மைத்திரிக்கு...

எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி வரை இந்தத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மேற்படி தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மைத்திரிக்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

### நெடுங்கேணியில்...

வவுனியா வடக்கு, நெடுங்கேணி, 6ஆம் கட்டை பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து அவர் அவசரமாக நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேற்படி நபரை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லத் தயாராகியபோது அவரின் மனைவி வவுனியா வைத்தியசாலை செல்வதற்கான பொருட்களை எடுத்து வர வீட்டுக்குச் சென்றார்.

இதன்போது, நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கணவர் மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையிலேயே மரணமடைந்தார்.

அந்தத் தகவல் வீட்டுக்குச் சென்றிருந்த அவரது மனைவிக்குத் தெரிய வந்ததையடுத்து, கணவரின் இறப்பைத் தாங்க முடியாது மனைவி தவறான முடிவெடுத்து வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் 18 மற்றும் 15 வயதுடைய இரு பெண் பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய இராமச்சந்திரன் ரவீந்திரன் மற்றும் தாயாரான 49 வயதுடைய இராமச்சந்திரன் ஜோதீஸ்வரி ஆகிய இருவருமே மரணமடைந்தவர்களாவார்.

சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

### 2 பெண்களின்...

சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடு அமைந்துள்ள பகுதியில் கடும் துர்நாற்றம் வீடுவதாக 119 எனும் துரித இலக்கத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

65 மற்றும் 79 வயதுடைய பெண்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், பிரேத பரிசோதனை இன்று நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளனர்.

### உலகின் மிகப்பெரிய...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கும் குறியிடப்பட்டுள்ள தனது எக்ஸ் தள பதிவில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:-

"543 தொகுதிகள், 28 மாநிலங்கள், 8 ஒன்றிய பிரதேசங்கள் ஆகியனவற்றை ஊடுருவி சுமார் 97 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கும், 2 ஆயிரத்து 600 கட்சிகளின் வேட்பாளர்களை கொண்ட உலகின் மிக பிரமாண்ட ஜனநாயகத் தேர்தல் நடவடிக்கையின் மூலம், ஆறு வாரங்களில் ஏழு கட்டங்களில், இந்தியாவின் பல கட்சி ஜனநாயகம் இந்திய ஒன்றியம் என்ற இந்திய அரசாங்கத்தைத் தெரிவு செய்கின்றது.

இலங்கைப் பிரஜை என்ற பெருமையுடனும், மறைக்கப்பட முடியாத இந்திய வம்சாவளி பின்னணியுடனும், இந்திய நாட்டு தேர்தல்களைக் கணிக்கின்ற இலங்கையின் ஒரு ஜனநாயகக் கட்சித் தலைவர் என்ற முறையில் இந்தியத் தேர்தல் பிரசாரத்தில் என் மனதை வெகுவாக கவர்ந்த சுலோகம் ஒன்று உண்டு.

அது, "நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகின்றீர்கள் என்பதற்கு நேரம் எடுத்துச் சிந்தியுங்கள்! சரியாக சிந்தித்து உங்கள் சரியான எம்.பியைத் தெரிவு செய்யுங்கள். ஆனால், தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா? இல்லையா? என ஒருகணமும் சிந்திக்காதீர்கள்! எப்போதும் வாக்களியுங்கள்! அது உங்கள் உரிமை!". இது இலங்கைக்கும் மிகவும் பொருத்தமான செய்தியைத் தரும் சுலோகம் என எண்ணுகின்றேன்.

மிகச் சிறந்த இந்திய மனங்களால் கட்டியெழுப்பப்பட்டு, நியாயம், சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்யும் இந்திய ஜனநாயகத்துக்கு எனது பாராட்டுகள்." - என்று மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.




# லைக்கா ஞானம் அறக்கட்டளையின் நிதி உதவியில் குழாய்க் கிணறுகள்

## மன்னார் முசலியில் கையளிப்பு

(மன்னார்)

லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எஸ்.பி. பொற்கேணி கிராமத்தில் மக்களின் குடி தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட மூன்று குழாய் கிணறுகள் நேற்று புதன்கிழமை (17) காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் மக்கள் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் நிலையில் அந்த மக்களின் குடி தண்ணீர் தேவையை இதுவரை எந்த அதிகாரிகளும் அரசியல் பிரதிநிதிகளும் தீர்த்து வைக்கவில்லை என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் கவனத்துக்குக் கொண்டு வந்த நிலையில் மன்னாரில் அமைந்துள்ள லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் குறித்த கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு குறித்த கிராமத்தில் குடி நீருக்காக மூன்று குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன், மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் லைக்காவின் ஞானம் அறக்கட்டளை பணியாளர்கள் இணைந்து வைபவ ரீதியாக இதனைத் திறந்து வைத்தனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதி இன்னும் இல்லை

நாட்டையே உலுக்கிய ஈஸ்டர் ஞயிறுக் குண்டுத் தாக்குதல் நடைபெற்று வரும் ஞாயிற்றுக்கிழமையோடு - இன்னும் மூன்று நாள்களில் - ஐந்து வருடங்களாகப் போகின்றன.

இந்தக் கொடூரத்தில் சுமார் 270 பேர் உயிரிழந்தனர். ஐந்நூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். அவர்களின் பலர் அங்கவீனமாயினர். பெருமளவு சொத்துக்கள் நாசமாகின. சுற்றுலாத் துறையே வீழ்ச்சி அடைந்தது. நாட்டின் பொருளாதாரம் அடியோடு படுத்தது.

இந்தக் கொடூரத்தின் உண்மையான சூத்திரதாரிகள் - குற்றவாளிகள் - இன்னும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவே இல்லை என்பதுதான் இந்த தொடர் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டோரின் - ஆதங்கமாக - ஒரே குற்றச்சாட்டாக - இருக்கின்றது.

அரசியல் தலையீட்டினால் உண்மையான குற்றவாளிகள் - பிரதான சூத்திரதாரிகள் - தப்பிவிட்டனர். நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெறவில்லை. ஆரம்பத்தில் சரியான திசையில் விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளும் அச்சுறுத்தப்பட்டனர். தொல்லைகளுக்கும் இம்சைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். அந்த பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர் என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இந்தத் தொடர் தாக்குதல்களில் பெரிதும் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் இந்த நாட்டின் கிறிஸ்தவ மக்கள்தான். அவர்களின் தேவாலயங்களும் பாதிக்கப்பட்டன.

அதனால் கிறிஸ்தவ மக்களின் தலைவர் என்ற முறையில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டி இவ் விடயத்தில் முன் நின்று துணிச்சலுடன் குரல் கொடுத்து வருகின்றார்.

இந்தத் தொடர் தாக்குதலின் பின்னர் மூன்றாவது ஆட்சித் தலைமை வந்து விட்டது. ஆனால் உண்மைக் குற்றவாளிகளை - சூத்திரதாரிகளை - சட்டத்தின் முன் நிறுத்தும் உறுதிப்பாட்டுடனான நேர்மையான புலன்விசாரணை இன்னும் ஆரம்பமாகக் கூட இல்லை என்ற அவநம்பிக்கை நிலையே இன்னும் தொடர்கின்றது.

ஆனாலும், இந்த விடயத்தை ஒட்டி ஏதோ விவகாரங்கள் கட்டவிழ்கின்றன, முன்னேற்றங்கள் நடக்கின்றன என்று காட்டும் கண்ணாமூச்சி விளையாட்டு மட்டும் தொடர்கின்றது. அந்த வரிசையில் மீண்டும் ஒரு தடவை - நாலாவது முறையாக - ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதல் விவகாரத்தை ஒட்டிய விவாதம் என்ற நாடகம் நாடாளுமன்றத்தில் அரங்கேறப் போகின்றது.

2019 இல் இந்தக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றுமையை அடுத்து முதல் விவாதம் நாடாளுமன்றத்தில் நடந்தது.

அதன்பின்னர் இவ்விடயத்தை ஒட்டி நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக 2021 மார்ச்சில் மற்றொரு நாடாளு மன்ற விவாதம் நடைபெற்றது.

பிண்ணர் ஈஸ்டர் குண்டு தாக்குதல் விவரங்கள் தொடர்பாக ‘சனல் -4’ தொலைக் காட்சியில் வெளியான புதிய தகவல்களை அடுத்து 2023 செப்டம்பரில் நாடாளு மன்றில் ஒரு விவாதம் நடைபெற்றது.

அந்த வரிசையில் வரும் 25, 26, 27ஆம் திகதிகளில் திரும்பவும் மூன்று நாள் நாடாளுமன்ற விவாதம் நடத்துவதற்கு இப்போது நாடாளுமன்ற அலுவல்களுக்கான குழு தீர்மானித்திருக்கின்றது.

தவிரவும், இந்தக் குண்டுத் தாக்குதல் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றும் பல தடவைகள் கூடி, பல அதிகாரிகளையும் சம்பந்தப்பட்டவர்களையும் விசாரணை செய்து ஓர் அறிக்கையையும் தயாரித்து முன் வைத்திருக்கின்றது.

இவ்வளவும் நடந்தும் கூட உண்மையான சூத்திரதாரிகள் இன்னும் வெளியே கொண்டுவரப்படவில்லை என்ற அதிருப்தி மட்டும் தொடர்ந்து நீடிக்கின்றது.

ஆட்சித் தரப்பில் மட்டுமல்ல, எதிர்க் கட்சிகள் தரப்பிலும் இவ்விடயம் குறித்து தெளிவான நிலைப்பாடு இன்னும் வெளிப்படவில்லை. ஆக, ஐக்கிய மக்கள் சக்தி மட்டும்தான் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த விடயத்தில் விசாரணைகளை எப்படி முன்னெடுப்போம் என்பதைக் கால அட்டவணையோடு எழுத்தில் அறிக்கையாக முன்வைத்திருக்கின்றது.

மற்றோர் எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தி, ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி இந்தக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று வாக்குறுதி அளித்து இருக்கின்றது.

குண்டு தாக்குதல் பேரவலம் குறித்து அதிகம் பேசப்படுகின்றது. அதிகம் விவாதிக்கப்படுகின்றது. ஆரவாரம் பண்ணப்படுகின்றது. ஆனால் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தும் விடயம் மட்டும் நடப்பதாக இல்லை. அதுதான் இவ்விவாகரத்தில் பெரும் துரதிஷ்டம்.



# மாகாண போட்டிக்குத் தெரிவான ஐ.எம்.ஏ. கராத்தே மாணவர்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐ.எம்.ஏ. சங்க கராத்தே மாணவர்கள் வவுனியா மாவட்ட போட்டிகளில் வெற்றி பெற்று வட மாகாண போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிக்கான வவுனியா மாவட்ட கராத்தே போட்டி அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

இதில் சென்பாய் பீ.மிதுசான் தலைமையிலான வவுனியா ஐ.எம்.ஏ. சங்கத்தை சேர்ந்த மாணவர்கள் காட்டா, டீம் காட்டா மற்றும் குமிதே ஆகிய நிகழ்சிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்று வடமாகாணக் கராத்தே போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# காரைதீவு பிரதேசத்திலுள்ள உணவகங்களில் சோதனை

(நூருல் ஹுதா உமர்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீரின் ஆலோசனைக்கு அமைய உணவகங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

காரைதீவு பிரதேச பல்வேறுபட்ட உணவு கையாளும் நிறுவனங்கள், மீன் விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவுக் கண்காட்சிகள், மற்றும் சமயஸ்தலங்களில் திடீர் பரிசோதனை இடம்பெற்றது.

உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் ஒழுங்கின்மை, நீண்ட நாள்களுக்குப் பொருத்தமில்லாதவாறு உணவுகளைக் குளிர்சாதனப் பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றன தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதர்களால் இதன் போது உணவு மற்றும் நீரால் பரவகூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டது.




# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர்களின் பெயர் பலகை திறப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம், பாறுக் ஷிஹான்)

1971 ஆம் ஆண்டு மஹ்மூத் மகளிர் கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்றதிலிருந்து இன்றுவரை (2024) 53 வருட கால கல்வி செயற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வலயத்தின் கீழ் இயங்கும் மஹ்மூத் மகளிர் கல்லூரி தனித்துவமான அடையாளத்தை கொண்டுள்ளது.

இதன் பின்னணியில் இந்தக் கல்லூரியின் நீண்ட கால தேவையாகவும் வரலாற்று நிகழ்வுகளை தற்கால இளம் மாணவ சமூகத்தவர்கள் அறிந்து கொள்ளும் நோக்கிலும் கல்லூரி முதல்வரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்றிட்டங்களில் ஒன்றான இந்தக் கல்லூரியில் அதிபர்களாக கடமையாற்றியவர்களின் பெயர்கள் மற்றும் காலங்களை உள்ளடக்கிய “மஹ்மூத் அதிபர் பெயர் பலகை” உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் குறித்த பெயர் பலகையை இந்தக் கல்லூரியின் பழைய மாணவியும் தற்போதைய 17 ஆவது அதிபரும் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முதலாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியுமான அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்தக் கல்லூரி வரலாற்றில் (1971-2024) இன்று வரை 17 அதிபர்கள் பணியாற்றியுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் சாய்ந்தமருதில்

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது 20, 22 ஆம் வட்டாரங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புக் கூட்டம் சாய்ந்தமருது முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமா லெப்பை, கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் மாவட்ட குழுவின் செயலாளருமான ஏ.சீ.சாமால்டீன், கல்முனை மாநகர சபை முன்னாள் வேட்பாளர் பஹ்மி மன்சூர் மற்றும் கட்சி கிளைகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருதில் கரையோரத்தில் கல் அணை அமைக்கும் பணி!

## ஆரம்பித்து வைத்தார் திகாமடுல்ல எம்.பி. அதாஉல்லாஹ்

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருதில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு பிரச்சினைக்குத் தீர்வாக முன்னெடுக்கப்படும் கரையோர கல் அணை அமைக்கும் பணியின் இரண்டாம் கட்டப் பணிகளை தேசிய காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்பு குழு தவிசாளருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் நேற்று (17) தொடங்கி வைத்தார்.



இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எம்.ஆஷிக், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ஜி.எம். அஸ்மி, கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் கரையோரம் மூலவள திணைக்களத்தின் பொறியியலாளர் எம்.துளசிதாசன், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜுனைத் வஃஷீர், நாடாளுமன்ற உறுபபினரின் சாய்ந்தமருது இணைப்பாளர் முஹம்மத் சபான், சாய்ந்தமருது பிரதேச செயலக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி முஹம்மத் நளீர், கரையோரம் பேணல் திணைக்களத்தின் சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நுஸ்ரத் அலி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நிந்தவூரில் கடலரிப்பைத் தடுக்க 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

## பைசால் காசிமின் முயற்சிக்குப் பலன்



(கே. எ. ஹமீட்)

நிந்தவூர் பிரதேசத்தின் வடக்குக் கடற்கரையில் கடலரிப்பைத் தடுக்கும் நிரந்தர வேலைத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் முயற்சியால் 20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் கரவலை மீன்பிடி சங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், நிந்தவூர் பிரதேசத்தின் வடக்கு கடல் எல்லையின் கடலரிப்பை தடுப்பதற்குக் கரையில் கல் வீதியமைக்கும் நிரந்தரத் தீர்வுத் திட்டத்துக்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்பர்வைக்கான கள விஜயத்தை நேற்று முன்தினம் (15) கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர் உட்பட உரிய அதிகாரிகளுடன் மேற்கொண்டார்.

இந்தத் தடுப்புத் திட்டமானது வடக்கு பகுதியில், நிந்தவூர் ரவாஹா பள்ளிவாயல் முன் கடல் எல்லை தொடக்கம் காரைதீவு வரையிலான பிரதேசம் வரைக்கும் இடம்பெறவுள்ளது.

மே மாதம் நடுப்பகுதியில் வேலைகள் தொடங்கவுள்ளதாக வாக்குறுதி அளித்ததோடு இதற்காக 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன், கிழக்கு கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான தடுப்பு சுவர் அமைக்கும் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் தெற்கு கடல் எல்லை பரப்பில் செய்து முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆசிரிய ஆலோசகருக்கு சேவை நலன் பாராட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனைக் கல்வி வலயத்தில் மிக நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற விஞ்ஞானப்பாட ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.ஸுஹதுல் அமீன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜி. எம்.நிசாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற எம்.எஸ்.ஸுஹதுல் அமீனின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு மற்றும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.




# தமிழருக்காய் உயிர்நீத்த அன்னை பூபதி...!

**(அன்னை பூபதி தியாகத் தாயின் 36 ஆம் ஆண்டு ஆண்டு நினைவு தினம் ஏப்ரல் 19. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது)**

*- நடராஜன் ஹரன் -*

தமிழ் மக்களின், உரிமைக்காக உண்ணாவிரதம் இருந்து 1988.04.19 ஆம் திகதி உயிர்நீத்த பூபதியம்மாவின் தியாகம் 36 ஆண்டுகளை எட்டியுள்ளது.

அன்னை பூபதி என்று அழைக்கப்படும் தாய் இந்தியப் படைகளுக்கு எதிராகச் சாகும்வரை உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த நாள் ஏப்ரல் 19.

யார் இந்த அன்னைபூபதி என்று சுருக்கமாகப் பார்க்கும் பதிவிது.

பூபதி அம்மாவின் கணவர் பெயர் கணபதிப்பிள்ளை. பத்துப்பிள்ளைகளின் தாய். மட்டு – அம்பாறை அன்னையர் முன்னணியின் துடிப்புள்ள முன்னணிச் செயற்பாட்டாளர். புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். இந்தியப்படை கிட்டத்தட்ட மக்கள் வாழிடங்கள் அனைத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டிருந்த காலம். அந்த இடைப்பட்ட காலத்துள் நடந்த கொடுமைகளை விவரிக்கவோ விளங்கப்படுத்தவோ தேவையில்லை.

இந்த நிலையில் தான் இந்தியப்படைக்கு எதிராகக் குரல் கொடுக்க – சாத்வீகப் போராட்டங்களை நடத்த மட்டு. – அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கையை வைத்து இந்திய அரசுக்கு எதிராக உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

1. உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும்.
2. புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவும் இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால் தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் அணி திரண்ட நிலையில் 1988 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்கமைய சென்ற அன்னையர் முன்னணிக் குழுவினருடன் இந்தியப் படையின் உயர் அதிகாரியான பிரிக்கேடியர் சண்டேஸ் பேச்சுக்கள் நடத்தினார். இந்தப் பேச்சுக்களின் போது அன்னையர் முன்வைத்த இரு கோரிக்கைகளையுமே மீளவும் நினைவூட்டினர். ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறை வேற்றப் படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது.

இந்த நிலையில் 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினரை இந்தியா பேச்சு வார்த்தைக்கு மீண்டும் அழைத்தது. இதற்கமையக் கொழும்பு சென்ற அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினருடன் பேச்சுக்களை மேற்கொண்ட இந்திய அதிகாரிகள் விடுதலைப் புலிகள் இந்தியப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதனைக் கடுமையாகக் கண்டித்த அன்னையர் முன்னணியினர், விடுதலைப் புலிகள் எங்கள் பாதுகாவலர்கள், நீங்கள்தான் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு வரவேண்டும் எனத் தெரிவித்த போது, அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட இந்தியத் தூதுவர் டிக்சீத் அன்னையர் முன்னணி மீது கடுமையாக ஆத்திரத்தை கொட்டி தீர்த்துள்ளார்.

நிலமை மோசமாகிக் கொண்டே சென்ற நிலையில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடக்கத் தீர்மானித்தனர்.

அப்போது பலர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம் பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் நாள் அன்னம்மா டேவிட் அன்னையர் முன்னணி சார்பாக உண்ணாவிரதத்தில் குதித்தார்.

அமிர்தகழி மாமாங்கேஸ்வர் ஆலய குருந்தை மரநிழலில் அன்னம்மாவின் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப்பட்டது.

இந்திய அரசோ, இந்தியப் படையோ அன்னம்மாவின் போராட்டத்துக்குச் செவிசாய்க்கவில்லை. மக்கள் அமிர்தகழி குருந்தை மரம் நோக்கி அணி அணியாகத் திரண்டனர். உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவர இந்தியப்படை திட்டமிட்டது. பல்வேறு மிரட்டல், கெடுபிடிகளுக்கு மத்தியில் போராட்டம் தொடர்ந்தது.

இறுதியில் சதித்திட்டம் வரைந்தது இந்தியப் படை. அன்னம்மாவின் பிள்ளைகளைக் கைது செய்தனர். அவர்களை மிரட்டி 'பலாத்கார அச்சுறுத்தல் காரணமாகவே அன்னம்மா உண்ணா விரதமாயிருக்கிறார் என்ற ஒரு கடிதத்தைக் கையொப்பத்துடன் வாங்கி, அதனைச் சாட்டாக வைத்து அன்னம்மாவைக் காப்பாற்றுவது போல் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றனர்.

இந்த நிலையில்தான் பூபதியம்மாள் தன் போராட்டத்தைத் தொடங்க எண்ணினார். முன்னெச்

தொடர்ச்சி▼

# தமிழருக்காய் உயிர்நீத்த அன்னை பூபதி...!

தொடர்ச்சி ▲

சரிக்கையாகச் சுய விருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக் கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது எனக் கடிதம் எழுதி வைத்தார்.

உண்ணா விரதப் போராட்டம் 19.03.1988 அன்று மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆல யத்தில் அதேயிடத்தில் தொடங்கி யது. நீர் மட்டும் அருந்தி சாகும்வரை போராட்டம்.

இடையில் பல தடங்கல்கள் வந் தன. இந்தியப் படையால் அன்னை யர் முன்னணியினரில் சிலர் மிரட்டப் பட்டனர். உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி பூபதியம்மாள் வற் புறுத்தப்பட்டாள். உண்ணாவிரதத் துக்கு ஒத்துழைப்பு வழங்கிய முக்கியஸ்தர்களையும் அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்பட வில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின்பின் 19.04.1988 அன்று உயிர் நீத்தார். அவரது உடலைக் கைப்பற்ற இந்திய இராணுவம் எடுத்த முயற்சிக்கெதிராக மக்கள் கடுமையாகப் போராடி உடலைக் காத்தனர்.

ஏற்கனவே திலீபன் இந்திய அரசுக்கு எதிராக நீராகாரம் கூட அருந்தாமல் பன்னிரண்டு நாள்கள்



உண்ணாநோன்பிருந்து சாவடைந் தார். அதற்குப் பின்னும் உண்ணா நோன்பிருந்த பூபதியின் செயல் முட்டாள் தனமானது என்று கூட அவர் மீது சிலர் விமர்சனங்கள் வைப்பதுண்டு.

ஆனால் பொது மக்களிடம் இருந்து தன்னிச்சையாக எழுந்த ஒரு போராட்டம் இது. திலீபனின் சாவின் பின்னும் இந்திய அரசிடம் அவர்கள் நம்பிக்கை வைத்திருந் தார்கள் என்று கருதமுடியுமா என்று தெரியவில்லை. சொல்லப் போனா- ால் திலீபனை விடவும் பூபதியம்மா வின் சாவு உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று என்றே நினைக்கிறேன்.

ஆனாலும் தங்கள் எதிர்ப்பைக் காட்ட அவர்கள் எடுத்த ஆயுதம் அது. அன்றைய நேரத்தில் மட்டுமன்றி, பின்னாட்களில் கூட அகிம்சை பற்றி எங்களுக்கு யாரும் போதிக்கமுன் யோசிக்க வைக்கும் ஓர் ஆயுதம்தான் அன்னை பூபதியுடையது.

சாவு பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம். அதன் மீதான பார்வையும் பெறுமதியும் சூழலையும் பொறுத்து மாறுபடும். சாவைத் தேர்ந்தெடுத்தல் என்பது அப்படி ஒன்றும் இமாலயச் சாதனை யாகவோ செய்ய முடியாத தியாக மாகவோ பார்க்கும் நிலையைத் தாண்டி வந்தாயிற்று. ஆனால் அவை தெரிவு செய்யப்படும் விதம் பற்றி இருக்கும் மதிப்பீடுகள்தான் வித்தியாசமானவை. அவ்விதத் தில் அன்னை பூபதியுடைய, திலீப னுடைய வடிவங்கள் எம்மால் நெருங்க முடியாத, செய்ய முடியாத வடிவங்களாகப் பார்க்கிறேன்.

ஒவ்வொருமுறைதிலீபன்நினைவு நாளுக்கும் உண்ணாமலிருப்பது பலரது வழக்கம். அன்றைக்குத் தெரி யும் உண்ணா நோன்பின் வேதனை. (சிலநேரங்களில் இரண்டுநேரம் உணவின்றி வெறும் தண்ணி யோடு சைக்கிளில் திரிந்த நிலைகூட உண்டு. ஆனால் அந்த நேரங்களில் வராத துன்பம், ஓரிடத்தில் இருந்து உண்ணா நோன்பென்று செய்தால் வந்துவிடும்) பன்னிரண்டு நாள்கள் ஒரு துளி நீர் கூட அருந்தாது தன்னை ஒறுத்து - அணுவணுவாக என்று சொல்வார்களே - அப்படிச் செத்துப்போன திலீபனின் சாவை நினைத்துப் பார்க்கவும் முடியாது. அன்னை பூபதியின் சாவும் அப்ப டியே.

எது எப்படி எனினும் எமது தமி ழர்கள் தன்மானத்துடன் வாழ ஏராள மான தியாகிகள் வழிசமைத்த னர். எனினும் இன்றும் சில தமிழ் நல்லுள்ளம் கொண்ட தியாகிகள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின் றனர். நீ இருந்தாலும் இறந்தாலும் பிறர் உன் பேர் சொல்ல வேண்டும், இறந்த பின்னும் பூமியில் உன் பெயர் வாழவேண்டும்.

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பெண்களுக்கு சீர்திருத்தத் திட்டம்

இன்றைய மாறிவரும் உலகில் அதிக மான குற்றச் செயல்கள் இடம் பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வரு கின்றனர். இத்தகைய குற்றவாளிக ளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கும் மிக முக்கியமான பணியை யாழ்ப்பாணச் சிறைச்சாலை வழங்குகின்றது.

இங்கு சுமார் 700 இற்கும் அதிக மான கைதிகள் புனர்வாழ்வளிக்கப் படுகின்றனர். பல்வேறு குற்றங்கள் புரிந்த கைதிகள் இருந்த போதும் அதிக கைதிகள் போதைப் பொருளு- க்கு அடிமையாகித் தடுத்து வைக்கப்பட் டவர்கள்.

இந்த நிலையில் பெண் கைதிகளுக் கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்று கடந்த 13 ஆம் திகதி அனைத் துலக மருத்துவ நல அமைப்பால் யாழ்ப் பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.



இது பெண்களுக்கான தையற் பயிற்சி நெறி ஆகும். இந்த நிகழ்வை யாழ்ப்பா ணம் சிறைச்சாலை ஒழுங்குபடுத்தி யிருந்தது.

இந்தந் நிகழ்வின் பிரதம அதிதியாக அனைத்துலக மருத்துவ நல அமைப் பின் தலைவி ராஜம் தெய்வேந்திரம் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாண நீதிவான் ஆனந்த ராசா, சிறைச்சாலை அட்தியட்சகர் இந்திரகுமார் நைற்றா முகாமையா ளர் திருமுருகன், சிறைச்சாலை உத்தி யோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலசல கூடம் அமைக்க உதவி

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முத்துஜயன்கட்டு, ஜீவநகர் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பயன்பாட்டுக்காக மலசலகூடம் கட்டுமானப் பணிக்காக முதலாம் கட்ட நிதியாக 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

வவுனியா – கணேசபுரம் கிராமசேவகர் பிரிவிலுள்ள அறநெறிப் பாடசாலையின் கட்டடம் அமைப்பதற்கான 2 ஆம் கட்ட நிதியாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி மோகனதாஸ் அவரது ஆச்சிரம தொண்டர்களுடன் நேரில் சென்று வழங்கினார்.



# மன்னாரில் ஸ்மார்ட் நடமாடும் சேவை; பயன்பெற அழைக்கிறார் அரச அதிபர்!

( வாஸ் கூஞ்ஞ, மன்னார் )

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் அனைத்து கிராமங்கள் தோறும் உள்ள மக்களுக்கும் கிடைக்கப்பெறுவதற்கான நடமாடும் சேவை மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதை நழுவ விடாது பயன்படுத்திக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மன்னார் மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இரண்டு தினங்கள் நடைபெற இருக்கும் நடமாடும் சேவைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் நேற்று புதன் கிழமை (17) மாலை ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலிலும் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் பரிச நாணயக் காரவின் எண்ணக் கருவில் இராஜாங்க அமைச்சர் புஸ்பகுமார அவர்களவின் ஒத்துழைப்புடனும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பங்களிப்புடனும் இந்த நடமாடும் சேவை மன்னாரில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையானது எதிர் வரும் 20,21 ஆம் திகதிகளில் அதாவது சனி , ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பொது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய பல்வேறுபட்ட செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்த இரண்டு நாள்களும் இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக் களங்கள் இணைந்து தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறக் கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

ஊழியர்சேமலாபநிதியம்,ஊழியர்நம்பிக்கை நிதியம் , ஊழியர் பணிக் கொடை தொடர்பான விடயங்களுக்கான பிரச்சினைகள் தீர்வு வழங்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அவைகளுக்கு 'சிமாட் போட்' உபகரணங்கள் தொழில் அமைச்சால் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் ஆயிரம் வறிய மாணவர்களுக்கு அவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் 'சிமாட் யுத்' திட்டத்தின் கீழ் வேலையற்று இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தகுதிகளுக்கு ஏற்றவாறு பொருத்தமான தொழில் வாய்ப்புகளும் வழங்கும் திட்டமும் பயிற்சிகளும் இதற்குள் அடங்குகின்றன.

இதில் 36 வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களும் பங்குபற்றுகின்றன. இதனால் இளைஞர் யுவதிகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கள் பெறுவதற்கான சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் முறைசாரா தொழில் புரிவோருக்கும் நன்மை பயக்கும் திட்டங்களும் இந்த நடமாடும் சேவையில் உள்ளடக்கபட்டுள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரிவோரில் இங்குள்ள பிள்ளைகளுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த இரண்டு நாள்களும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் களத்தால் மருத்துவ முகாமும் நடத்தப்படவுள்ளது. அத்துடன் இரத்ததானம் முகாமும் நடைபெறும்.

ஆகவே இந்த சந்தர்ப்பத்தை மன்னார் மக்கள் நழுவவிடாது பயன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.– என்று தெரிவித்துள்ளார்.



# சக்கோட்டை பிரான்சிஸ் ஆலயத்தில் மருத மடு அன்னையின் வழிபாடுகள்

மருத மடு அன்னையின் திருச் சொருபம் பருத்தித்துறை சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இன்று (18) வியாழக்கிழமை வைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன.

மருத மடு அன்னையின் திருச் சொருப பவனி நெல்லியடி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயததுக்கு நேற்று மாலை 5 மணிக்கு வருகை தந்தது. பின்னர் அங்கு சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றன.

இச்த வழிபாடுகளில் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் இன்று காலை 7 மணியளவில் அங்கிருந்து புறப்பட்ட மருதமடு மாதா திருச்சொருப பவனி காலை 8 மணியளவில் பருத்தித்துறை சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்துக்குச் சென்று அங்கு சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றன.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மருத மடு மாதாவின் வருகையால் நெல்லியடி நகரமே விழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை தந்திருந்தனர். நெல்லியடி பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டனர்.









# வேட்பாளர் நடிகர் மன்சூர் அலிகானுக்கு பழச்சாறில் விஷம் கலந்து கொடுத்தனர்!

## மயக்கம், நெஞ்சுவலியுடன் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் நாளை தமிழகத்தில் நடைபெற இருக்கும் முதற்கட்ட வாக்குப்பதிவில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் நடிகர் மன்சூர் அலிகான் வேட்பாளராக களம்காண்கிறார்.

தொகுதி முழுக்க தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த நடிகர் மன்சூர் அலிகான் குடியாத்தம் பகுதியில் நேற்று முன்தினம் இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது அவருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் குடியாத்தத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டமையைத் தொடர்ந்து சென்னை அழைத்து வரப்பட்ட மன்சூர் அலிகான் கே.கே. நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தனக்கு யாரோ பழச்சாறில் விஷம் கலந்து கொடுத்தனர் என மன்சூர் அலிகான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், தேர்தல் தொடர்பான பணிக்காக குடியாத்தம் சந்தையில் இருந்து வீடு திரும்பியபோது வழியில் சிலர் பழச்சாறு மற்றும் மோர் வழங்கினர்.



கட்டாயப்படுத்தி அவர்கள் கொடுத்த பழச்சாறை குடித்த சில மணி நிமிடங்களிலேயே மயக்கம், நெஞ்சுவலி ஏற்பட்டது.

தற்போது அவர் சென்னையில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு விஷ முறிவு, நுரையீரல் வலிக்கான மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்று மாலைக்குள் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து பொதுப்பிரிவுக்கு மாற்றம் செய்யப்படுவேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## நான்கு கோடி ரூபா பணம் சிக்கிய விவகாரம்

# பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரன் மீது உரிய நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவு

ரூ. 4 கோடி பணம் சிக்கிய வழக்கில் திருநெல்வேலி மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனை தகுதி நீக்கம் செய்யக் கோரிய வழக்கில், உரிய நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து கடந்த 6 ஆம் திகதி புறப்பட்ட நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் ரூ. 4 கோடி பணம் தேர்தல் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில், அவர்கள் அந்தப் பணம் திருநெல்வேலி மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமானது என வாக்குமூலம் அளித்தனர். இதை நயினார் நாகேந்திரன் மறுத்தார்.

இதையடுத்து தாம்பரம் பொலிஸார் நடத்திய தொடர் விசாரணையில், அந்த ரூ. 4 கோடி பணம் நயினார் நாகேந்திரனுடையது என முதல்கட்ட தகவல் வெளியாகியது. இது குறித்து பொலிஸார் வழக்குப் பதிந்துள்ளனர்.

இந்த நிலையில், நயினார் நாகேந்திரன் மீது சட்ட விரோத பணப் பரிமாற்ற சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அமலாக்கத் துறையிடம் மனு அளிக்கப்பட்டது.

இதற்கிடையில், நயினார் நாகேந்திரனைத் தகுதி நீக்கம் செய்யக் கோரி நெல்லை தொகுதி சுயேச்சை வேட்பாளர் ராகவன் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து, அதனை அவசர வழக்காக விசாரிக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தார்.

இந்த வழக்கை இன்று விசாரித்த உயர்நீதிமன்றம், நயினார் நாகேந்திரன் தொடர்புடைய வழக்கில் உரிய நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும், தேர்தல் ஆணையம் தரப்பில், இந்த வழக்கில் குற்றப்பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வருமான வரித்துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, விசாரணையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

# செவ்வாயில் தன் பறக்கும் பணியை முடித்தது இன்ஜெனியூட்டி ஹெலி!

## இறுதித் தகவலைப் பூமிக்கு அனுப்பி வைத்தது இனி அசைவற்ற நிலையில் தகவல் சேகரிக்கும்

வொஷிங்டன்,ஏப்.18

இனி செவ்வாய் கிரகத்தின் மேற்பரப் பில் அசைவற்ற நிலையில், தரவுகளை சேகரிக்கக்கூடிய அமைப்பாக இன்ஜெ னியூட்டி செயல்படும் என்று நாஸா கூறி உள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா, செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்காக பெர்சவரன்ஸ் என்ற ரோவரை அனுப்பியது. இந்த ரோவர் 2021ம் ஆண்டு பெப்ரவரி மாதம் செவ்வாய் கிரகத்தில் ஜெசெரோ க்ரேடர் என்கிற இடத்தில் தரையிறங்கியது. அப்பகுதியில் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஏரி இருந் திருக்கலாம் என கருதப்படுகிறது. இதனால் அங் குள்ள பாறை மாதிரிகளை சேகரித்து பூமிக்கு கொண்டு வந்து ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெர்சவரன்ஸ் ரோவருடன் இன் ஜெனியூட்டி என்கிற சிறிய ஹெலிக் கொப்டரும் (ட்ரோன்) அனுப்பப்பட்டிருந் தது. ரோவர் பயணிக்கும் செவ்வாய் கிரகத்தின் நில அமைப்புகளை கண் காணிக்க இந்த ஹெலிக்கொப்டர் பயன் படுத்தப்பட்டது. ரோவரின் செயல்பாடு களையும் கண்காணித்து அவ்வப்போது தகவல்களை அனுப்பி வந்தது.

முதல் முறையாக 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி செவ்வாய் கிரகத்தில் பறந்து தனது பணியை தொடங்கிய இன்ஜெனியூட்டி ஹெலிக் கொப்டர், இதுவரை 72 முறை பறந்துள்ளது. அதேசமயம் பெர்சவரன்ஸ் ரோவர் பல்வேறு இடங்களில் பாறைகளை துளையிட்டு துகள்களை சேகரித்துள்ளது.



இந்நிலையில், இன்ஜெனியூட்டி ஹெலிக்கொப்டர் தனது இறுதித் தகவலை பூமிக்கு அனுப்பியிருக்கிறது. இனி செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் ஓர் அசைவற்ற நிலையில், தரவுகளை சேகரிக்கக்கூடிய அமைப்பாக இன் ஜெனியூட்டி செயல்படும் என்றும், எதிர்காலத்தில் செவ்வாய் கிரக ஆராய்ச்சியாளர்களுக்கு பயனளிக்கும் தரவை சேகரிக்கும் என்றும் நாஸா தெரிவித்துள்ளது.

மேலும், பெர்செவரன்ஸ் ரோவரால் சேகரிக்கப்பட்ட செவ்வாய் கிரக பாறை மாதிரிகளைப் பூமிக்கு விரைவாகவும் குறைந்த செலவிலும் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வதாக

நாஸா கூறியிருக்கிறது. பட்ஜெட் அதிகமாகிவிட்டதாக கடும் விமர்சனம் எழுந்த நிலையில், நாசா இவ்வாறு தெரி வித்துள்ளது.

# சிறியளவு படையெடுப்பில் ஈடுபட்டாலும் இஸ்ரேலுக்குப் பயங்கரப் பதிலடி கிட்டும்

## ஈரான் அதிபர் ரெய்சி கடும் எச்சரிக்கை

தெஹ்ரான்,ஏப்.18

இஸ்ரேல் சிறிய அளவிலான படையெடுப்பில் ஈடுபட்டாலும், அதற்கு பெரிய அளவில் மற்றும் பயங்கர பதிலடி கிடைக்கப் பெறும் என்று ஈரான் அதிபர் ரெய்சி எச்சரித்துள்ளார்.

ஈரானின் தெஹ்ரான் நகரில் ஆண்டுதோறும் நடைபெறும் இராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சி நேற்று நடந்தது. இந்த அணிவகுப்பில் ஆளில்லா விமானங்கள் மற்றும் நீண்ட தொலைவு சென்று தாக்க கூடிய பாலிஸ்டிக் ரக ஏவுகணைகள் உள்ளிட்ட இராணுவ சாதனங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் இராணுவத்தளபதிகள், உயரதிகாரிகள் மற்றும் வீரர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். எனினும், இதனை ஈரானின் அரசு தொலைக்காட்சி நேரலையாக ஒளிபரப்பு செய்யவில்லை. இதனை பார்வையிட்ட பின்னர் ஈரான் அதிபர் இப்ராகிம் ரெய்சி வீரர்கள் இடையே உரை யாற்றினார்.

அப்போது அவர் கூறும்போது, சிறிய அளவிலான படையெடுப்பில் இஸ்ரேல் ஈடுபட்டாலும், அதற்கு பெரிய அளவில் மற்றும் பயங்கர பதிலடி கிடைக்கப்பெறும் என்று எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, இந்த வெற்றியை ஈரான் கொண்டாடியது. எனினும், இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுக்க கூடும் என பரபரப்பாக பார்க்கப்படுகிறது. ஈரானுக்கு எதிராக சில ஐரோப்பிய நாடுகள், தடைகளை விதிக்க முன்வந்துள்ளன. அமெரிக்காவும் தடை நடவடிக்கையை முன்வைத்துள்ளது.

ஈரான் தாக்குதலில் ஈடுபடாமல் கட்டுப்பாட்டுடன் இருக்கும்படி ஐரோப்பிய நாடுகள் கேட்டு கொண்டன. இதேபோன்று, இஸ்ரேலின் கூட்டணி நாடுகளும் நெதன்யாகுவிடம் தாக்குதலை கைவிடும்படி வேண்டுகோள் விடுத்துள்ளன.



ஆனால், கூட்டணி அரசுகளின் கோரிக்கை ஒருபுறம் இருந்தபோதும், தற்காப்புக்காக இஸ்ரேல் தன்னுடைய சுய முடிவை எடுக்கும் என்று நெதன்யாகு கூறியுள்ளார். இதனால், ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் கடந்த முதலாம் திகதி தாக்கப்பட்டதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மீது ஏவுகணைகள், ஆளில்லா விமானங்களை கொண்டு கடந்த சனிக்கிழமை ஈரான் தாக்குதல் நடத்தியது. எனினும், அமெரிக்கா உதவியுடன் தாக்குதலை இஸ்ரேல் முறியடித்தது. இதனால், மத்திய கிழக்கு பகுதியில் போர் ஏற்படுவதற்கான பதற்றம் அதிகரித்தது.

இந்த சூழலில், இஸ்ரேல் பதிலடி தாக்குதல் நடத்தும் முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசித்து கொள்ள வேண்டும் என்று ஈரான் சமீபத்தில் எச்சரித்தது. இஸ்ரேல் அரசு மற்றொரு தவறை செய்யும் என்றால், ஈரானின் பதிலடி நிச்சயம் மிக கடுமையாக இருக்கும் என்றும் தெரிவித்தது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

வியாழக்கிழமை 18/04/2024

## மோசடி சம்பவங்கள் கியூபெக்கில் உயர்வு

கியூபெக்,ஏப்ரல் 18

கியூபெக் மாகாணத்தில் மோசடி சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

C2



### வரவு - செலவுத் திட்டம்

# கன்சர்வேட்டிவ் எதிர்க்குமானால் அது நியாயத்திற்கே எதிரானது!

### பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்து

ஒன்ராரியோ,ஏப்ரல் 18

**கன்சர்வேட்டிவ் கட்சியினர் மத்திய அரசாங்கம் முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பார்களாயின் அது நியாயத்திற்கு எதிரான வாக்கு என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித் துள்ளார்.**

**லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர களுக்கான கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

செலவு செய்வதற்கு விருப்பமுள்ள ட்ரூடோவின் வரவு செலவுத் திட்டம் என கன்சர்வேட்டிவ் கட்சியினர் ஏற்கனவே இந்த வரவு செலவுத் திட்டத்தை விமர்சித்துள்ளனர்.

புதிய ஜனநாயகக் கட்சியினர் இந்த வரவு செலவுத் திட்டத்தின் சில அம்சங்கள் தொடர்பில் ஏற்கனவே விமர்சனம் தெரிவித்து வருகின்ற நிலையில், அவர்களின் நிலைப்பாடு குறித்து பிரதமர் ட்ரூடோ எந்தவிடயங்களையும் குறிப்பிடவில்லை.

# பல் பராமரிப்புத் திட்டத்திற்கு அரசு திருத்தங்கள் அறிவிப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 18


கனடிய அரசாங்கத்தின் பல்பராமரிப் புத் திட்டத்தில் சுகாதார அமைச்சர் திருத்தங்களை அறிவித்துள்ளார்.

ஏற்கனவே கனடிய அரசாங்கம் அறிவித்துள்ள பல்பராமரிப்புத் திட்டத் திற்கு பெரும்பான்மையான பல் வைத் தியர்கள் ஆதரவு தெரிவிக்காத நிலை யிலேயே இந்தத் திருத்தங்கள் அறி விக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகின்றது.

ஏற்கனவே, இந்த நிகழ்ச்சியில் 1.7 மில்லியன் சிரேஷ்ட பிரஜைகள் பதிவு செய்துள்ள நிலையில், இந்த நிகழ்ச் சியை முன்னெடுப்பதில் பல்வைத் தியர்கள் பெரிதாக ஆர்வம் கொண்டி ருக்கவில்லை என பல்வைத்தியர்கள் அமைப்புத் தெரிவித்திருந்தது.

C2






# கனடிய நாடாளுமன்றில் தனி நபர் கண்டிக்கப்பட்ட முதல் சம்பவம்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 18

கனடிய நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக தனியார் பிரஜை ஒருவர் நாடாளுமன்றத்தில் கண்டிக்கப்பட்ட சம்பவம் நேற்று ஏப்ரல் 17ஆம் திகதி இடம்பெற்றது.

கனடாவின் சமூக ஊடகங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை அதிகம் ஈர்த்ததாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

சர்ச்சைக்குரிய எரைவ்கென் கைபேசி செயலியின் தொடர்பாகவே இந்த நிகழ்வு இருந்தது.

கிறிஸ்டியன் பிரித் என்பவர் எரைவ் கென் தொடர்பான நாடாளுமன்ற குழுவின் முன்னால் கருத்து தெரிவிப்பதற்கு மறுப்பு தெரிவித்த நிலையில், 'நாடாளுமன்ற குழுவினால் உங்களிடம் எழுப்பப்படும் அனைத்துக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்' என பிரித்தைப் பார்த்து சபாநாயகர் கிரெக் பெர்கஸ் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்வின் போது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் ஆகியோர் சபைக்கு வெளியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023ஆம் ஆண்டில் மாத்திரம் 30,000இற்கும் மேற்பட்ட மோசடிகள் இடம்பெற்றுள்ளமை பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் இணைய மோசடிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2023ஆம் ஆண்டில் 37,000 மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும், இது முந்தைய வருடத்துடன் ஒப்பிடும் போது 22 சதவீத அதிகரிப்பு எனவும் கியூபெக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடிச் சம்பவங்களில் கியூபெக்கைச் சேர்ந்தவர்கள் 3 மில்லியன் டொலர்கள் வரை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பல்பராமரிப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு பல்சிகிச்சை நிலையங்களுக்கு என்ன வழங்கப் போகின்றது என்பது குறித்து தெளிவில்லாமையே பல் வைத்தியர்கள் மற்றும் பல்சிகிச்சை நிலையங்களின் தயக்கத்திற்கு காரணமாக இருந்தது.

இந்த நிலையில், ஜூலை மாதம் முதல் சேவைக்காக நேரடியாக சேவை வழங்குனர்கள் அரசாங்கத்திடமிருந்து பணம் அறவிடக்கூடியதாக இருக்கும் என சுகாதார அமைச்சர் மார்க் ஹொலன்ட் தெரிவித்துள்ளார்.




# வாகனத் தரிப்பிட விதி மீறல்களுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன

ஒன்ராரியோ, ஏப்ரல் 18

நூற்றுக்கும் மேற்பட்ட வாகனத் தரிப்பிட விதி மீறல்களுக்கான கட்டணங்களை அதிகரிப்பதற்கு சார்பாக டொரன்டோ நகர சபை உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்துள்ளனர்.

ஏப்ரல் 17ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது, நகர சபையானது 125 விதி மீறல்களுக்கு அபராதத்தை அதிகரிப்பது தொடர்பில் விவாதித்தது.

இது தொடர்பான பிரேரணையை நகர சபை உறுப்பினரும், உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் குழுவின் தலைவருமான ஜெனிப்பர் மெக்கல்வி சமர்ப்பித்திருந்தார்.

புதிய திருத்தத்திற்கு அமைய சைக்கிள் பாதைகளில் வாகனம் நிறுத்துவதற்கான அபராதம் 150 டொலர்களில் இருந்து 200 டொலர்களாகவும், வாகனம் நிறுத்தல் இயந்திரங்களின் கட்டணம் 35 டொலர்களில் இருந்து 50 டொலர்களாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த புதிய திருத்தங்கள் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளன.

# நோர்த் யோர்கில் சூடு ஒருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 18

நோர்த் யோர்க் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் 23 வயதான சந்தேகநபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஏப்ரல் 16ஆம் திகதி இரவு 9 மணியளவில் ஷெப்பர்ட் அவனியு வெஸ்ட் மற்றும் ஜேன் ஸ்ட்ரீட் அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒருவரின் கையில் துப்பாக்கியால் சுட்டுவிட்டு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானவருக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் இல்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






# 400 கிலோ தங்கத்தை சூறையாடியோர் அடையாளம் காணப்பட்டுள்ளார்களாம்!

## ஓராண்டின் முடிவில் பொலிஸார் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 18

கனடாவில் இடம்பெற்ற 400 கிலோ தங்கம் சூறையாடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சுமார் 24 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் சூறையாடப்பட்டிருந்தன.

கடனாவின் பியர்சன் விமான நிலையத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி – சரியாக ஓராண்டுக்கு முன்னர் – இவ்வாறு சுமார் 400 கிலோ கிராம் எடையுடைய தங்கம் அபகரிக்கப்பட்டது.

பீல் பிராந்திய பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த சம்பவம் இடம்பெற்ற போது எயார் கனடா விமான சேவையில் கடமையாற்றிய இருவரும் தங்க அபகரிப்புக்குத் துணை நின்றனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேருக்கு நாடு தழுவிய அடிப்படையிலான பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட 6600 தங்க பிஸ்கட்கள் மற்றும் 2.5 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு நாணயம் என்பன இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

இந்த கொள்ளையுடன் தொடர்புடைய சிலர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தங்க அபகரிப்புக்குற்றச்சாட்டு தொடர்பில் எயார் கனடாவின் முன்னாள் மற்றும் இந்நாள் ஊழியர்களும் சந்தேகநபர்களாக இருக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொத்தமாக ஒன்பது சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று ஏப்ரல் 17ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பொலிஸார், ஐந்து சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறியுள்ளனார்.

கனடிய வரலாற்றில் மிகப்பாரிய தங்க அபகரிப்பாகக் கருதப்படும் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் நான்கு பேர் மீது குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் மீது 19 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன எனவும், பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# எரிபொருளின் விலை கூட தங்கத்தின் விலையும் கூடும்

ஒன்ராரியோ,ஏப்ரல் 18

ஒன்ராரியோவில் தங்கத்தின் விலை அதிகரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வாரத்தில் எரிபொருளின் விலையில் மாற்றம் ஏற்படவுள்ளமையால், இது தங்கத்தின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக்கிலும், ஒன்ராரியோவிலும் வியாழக்கிழமை இரவுடன் எரிபொருள்களின் விலை லீற்றருக்கு 14 சதத்தால் அதிகரித்துள்ளது.

கோடை காலத்திற்கான எரிபொருளின் புதிய கலவையே இந்த விலை அதிகரிப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# பூர்வீகக் குடிகளின் உட்கட்டமைப்பை அரசு வரவு - செலவுத் திட்டத்தில் புறக்கணிப்பாம்!

## அவர்களின் தேசிய சபையின் தலைவர் குற்றச்சாட்டு

ஒன்ராரியோ, ஏப்ரல் 18

கனடிய மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டம் பூர்வீகக் குடிகளின் உட்கட்டமைப்புத் தேவை களை புறக்கணித்துவிட்டதாக பூர்வீகக் குடிகளின் தேசிய சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

2030ஆம் ஆண்டளவில் பூர்வீகக் குடிகளின் உட்கட்டமைப்பு இடைவெளி களை இல்லாது செய்வதாக அளித்துள்ள நீண்ட கால வாக்குறுதியை மத்திய அரசாங்கம் மறந்துவிட்டதாக பூர்வீகக் குடிகளின் தேசிய சபையின் தலைவர் சின்டி வூட்ஹவுஸ் குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தில் தம்மிடம் கலந்தாய்வு செய்யப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.